30 APR 2000
30 APR 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 81 ஞாயிற்றுக்கிழமை ( 30 - 04 - 2000 ) VALAMPURI ஒலி: 133

## நாளை மேதினம்

# தற்கொலைகுண்டுதாக்குதல்அச்சம்

# கொழும்பு நகரில் பலத்த பாதுகாப்பு

## விதிச் சோதனைகள் கடுமை

( கொழும்பு )

கொழும்பினுள் தற்கொலைக்குண்டுதாரிகள் நுழைந்திருக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாக என்று மில்லாதவாறு கொழும்பு நகரைப் பலப்படுத்துவதில் பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியும, ஐக்கிய தேசியக் கட்சியும் இம்முறை நாட்டின்பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக மேதினத்தை. நிகழ்ச்சிகள், களியாட்டங்கள், ஊர்வலங்கள் எதுவுமின்றி அமைதியான முறையில் கொண்டாடுவதற்கு தீர்மானித்துள்ளன.

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நாளை நடைபெற இருக்கும் மேதினக் கூட்டங்களை அடுத்து தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவிஇருக்கலாம் என்ற அச்சம் காரணமாக கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

ஆனையிறவு படைத்தளம் விடுதலைப்புலிகள் வசமானதை அடுத்தும் வடபகுதியில்

(6ஆம் பக்கம் பார்க்க )

## தொலைபேசி இணைப்புகள் நாளைமுதல் கிடைக்கலாம்

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார்பரிவர்த்தனை நிலையத்தின் ஊடாக மூன்று மார்க்கமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தொலைபேசி இணைப்புக்களை நாளை முதல் வழங்கவிருப்பதாக ரெலிகொம் நிறுவன உயர் பொறியியலாளர் ஒருவர் நேற்று வலம்புரிக்குத் தெரிவித்தார். இத்தொலைபேசி இணைப்புகள் வானொலி உபகரணங்கள் மூலம் மன்னார் ஊடாக மூன்றுமார்க்கங்களில் வழங்கப்படவுள்ளது. இதற்கென கொழும்பிலிருந்து நேற்று

(6ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை இராணுவ காவலரண்மீது புலிகள் தாக்கியதில் மூன்று படையினர் பலி !

(யாழ்ப்பாணம்)

முகமாலைப் பகுதியில் உள்ள இராணுவக் காவலரண் மீது நேற்று முன்தினம் புலிகள் நடத்திய தாக்குதலில் 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளார்கள் என்றும், பல படையினர் காயமடைந்துள்ளனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(6ஆம் பக்கம் பார்க்க)

## உசன் பகுதியில் இராணுவம்குவிப்பு காவல்அரண் அமைப்பதில் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி உசன் பகுதியில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உசன் பகுதி மக்கள் வெளியேறியுள்ள நிலையில் அங்கு மக்களின் வீடுகளில் இராணுவத்தினர் பெருமளவு குவிக்கப்பட்டு வருகின்றனர்.

இங்கு நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் காப்பரண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உசன், எழுதுமட்டுவாள் பகுதிகளில் பலத்த ஷெல் வீச்சு மக்கள் பதட்டம்

(கொடிகாமம்)

உசன், எழுதுமட்டுவாள், மற்றும் கொடிகாமத்தை அண்டிய பகுதிகளில் கடுமையான ஷெல் தாக்குதல்கள் நேற்று இடம்பெற்றுள்ளன. இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் ஷெல் வீச்சுக்களை மேற்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## எழுதுமட்டுவாள் ஷெல்வீச்சில் இருவர் காயம்

(கொடிகாமம்)

எழுதுமட்டுவாளில் நேற்று மாலை 5.00மணியளவில் விழுந்து வெடித்த ஷெல்களினால் இரண்டு பேர் காயம

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## ஐ.தே.க அன்பளிப்பான 10 லட்ச ரூபாய் பெறுமதியான வைத்திய உபகரணங்களைஏற்க இராணுவம்மறுப்பு!

(கொழும்பு)

ஆனையிறவு படைத்தள அழிப்பின் போது காயமடைந்து இராணுவ வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் படை வீரர்களுக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை ஐ.தே. கட்சி இன்று காலை 10 மணியளவில் அன்பளிப்புச் செய்த போது

(6ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு மோதலில் மகன் கொல்லப்பட்டதை அறிந்த தந்தை மகாவலியில் குதித்து தற்கொலை

[கொழும்பு]

ஆனையிறவுத்தளம்மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலில் மகன் இறந்த செய்தி கேட்டு தந்தை மகாவலிகங்கையில் குதித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் கடுகஸ்தோட்டையில் உள்ள கொட்டதெனியா

[6 ஆம் பக்கம் பார்க்க]

## உயிரிழந்த புலிகள் விபரம்

(வவுனியா)

ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையின் போது தமது தரப்பில் உயிரிழந்த மேலும்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## ★ ஷெல் தாக்குதல்களை அடுத்து உசன்,மிருசுவில்,எழுதுமட்டுவாள் மக்கள் பெருமளவில் இடம்பெயர்வு

(கொடிகாமம்)

கொடிகாமத்தை அண்டிய பகுதிகளிலும் எழுதுமட்டுவாள், உசன்பகுதிகளிலும் நேற்று இடம்பெற்ற ஷெல் தாக்குதலை அடுத்து அப்பகுதிகளிலிருந்து மக்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ வைத்தியசாலையின் பணிப்பாளராக பிரிகேடியர் டட்லி பெரேரா

(கொழும்பு)

ஆனையிறவுத் தாக்குதலின் போது காயங்களுக்குள்ளான படை வீரர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கும்இராணுவ வைத்திய சாலையின் பணிப்பாளராக பிரிகேடியர் டட்லிபெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். கொழும்பு இராணுவ வைத்திய சாலையின் பணிப்பாளராக

(6ஆம் பக்கம் பார்க்க)

## ★ நாட்டின் இன்றைய நிலை குறித்து பேச ஜனாதிபதி விடுத்த அழைப்பை ரணில் ஏற்றார்

(கொழும்பு)

ஆனையிறவுப் படைத்தள வீழ்ச்சியை அடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற நிலை குறித்து பேச்சு நடத்த வருமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பை எதிர்க்கட்சிதலைவர் ரணில்விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பான கடிதம் ஒன்றை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தானும்கட்சிச் செயலாளர்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தொலை பேசிசேவை சீர்குலைவால்

# 2 ஆயிரம் பேர் நிர்க்கதியில்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவில் தொலைத் தொடர்பு கோபுரம் தகர்க்கப்பட்டமையானது அத்தொழிலை நம்பியிருந்த சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களை நிர்க்கதி நிலைக்குள்ளாக்கியுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பலர் தமது சங்கபணிமனையில் முக்கிய கூட்டம் ஒன்றை அண்மையில் கூட்டியிருந்ததாகவும் அதன் அடிப்படையில் யாழ். அரச அதிபர் உட்பட்ட பலருக்கு அவசர கடிதங்கள் அனுப்பியுள்ளதாகவும் மிக விரைவில் தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வட. பிராந்திய ரெலிக்கொம் பணிப்பாளர், பலாலி இராணுவ தலைமையகம், ரெலிக்கொம் பிரதம நிறைவேற்று அலுவலர் ஆகியோருக்கும்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் சிலர் தமது தொழிலை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் மேலும் அறியப்படுகிறது.

தற்போதைய நிலைமை கருத்தில் கொண்டு வடபகுதிக்கான தொலை பேசி சேவையை ஏற்படுத்தும் மாற்றுவழி குறித்து தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகவும் மிக விரவில் அம்முயற்சி பயன் கொடுக்கும் என்றும் சம்பந்தப்பட்ட தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. (க-12)

## சுங்கத்திணைக்களத்திலிருந்து கொள்கலன்கள் கடத்தப்பட்டதுதொடர்பாக விசாரணை நடாத்த ஜனாதிபதி பணிப்பு

[கொழும்பு]

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து துறைமுக கொள்கலன்களைஅகற்றிய சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகளை நடாத்தவென ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க விசேட குழுவொன்றினை நியமித்துள்ளார்.

வெளிநாட்டு பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியவுடன் ஜனாதிபதியிடம் விரிவாக இது பற்றிய விடயங்களை எடுத்துக் கூறியதன் பேரிலேயே மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சுசுங்கத்திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் கொண்ட மேற்படி குழுவினர்க்கு சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை நடத்தி ஒரு கிழமைக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென ஜனாதிபதி கட்டளை பிறப்பித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

அத்துடன்,

மேற்படி 40 இற்கும் மேற்பட்ட கொள்கலன் அகற்றிய சம்பவம் தொடர்பாக துறைமுக அதிகார சபையின் 4 அதிகாரிகள் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். (உ)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 29 ஆம் திகதி வரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது:

### சங்கானை

141867 ஏ

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 137388 ஏ | 137388 பி |
| 137455 ஏ | 137455 பி |
| 137455 சி | 138631 ஏ |
| 138631 பி | 138631 சி |
| 138631 டி | 138631 ஈ |
| 138631 எவ் | 138635 ஏ |
| 138635 பி | 138647 ஏ |
| 138647 பி | 138652 ஏ |
| 138652 பி | 138653 ஏ |
| 138653 பி | 138654 ஏ |
| 138654 பி | 138654 சி |
| 138654 டி | 138654 ஈ |
| 138654 எவ் | 138660 ஏ |
| 138660 பி | 138660 சி |
| 138660 டி | 138660 ஈ |
| 138662 ஏ | 138662 பி |
| 138663 ஏ | 138663 பி |
| 138663 சி | 138665 டி |
| 138665 ஏ | 138665 பி |
| 128665 சி | 138665 டி |
| 138666 ஏ | 138674 ஏ |
| 139366 ஏ | 139366 பி |
| 139366 சி | 139366 டி |
| 139367 ஏ | 139367 பி |
| 139367 சி | 139367 டி |
| 141524 ஏ | 141524 பி |
| 141524 சி | 141524 டி |
| 141524 ஈ | 141540 ஏ |
| 141547 ஏ | 141547 பி |
| 141547 சி | 141566 ஏ |
| 141566 பி | 141588 ஏ |
| 141608 ஏ | 141608 பி |
| 141608 சி | 141618 ஏ |
| 141618 பி | 141618 சி |
| 141618 டி | 141618 ஈ |
| 141624 ஏ | 141627 ஏ |
| 141628 ஏ | 141628 பி |
| 141629 ஏ | 146502 ஏ |
| 146512 ஏ | 146513 ஏ |
| 146513 பி | 146518 ஏ |
| 146518 பி | 146518 சி |
| 146519 ஏ | 146519 பி |
| 146519 சி | 146520 ஏ |
| 146520 பி | 146520 சி |
| 146520 டி | 146520 ஈ |
| 146523 ஏ | 146523 பி |
| 146523 சி | 146523 டி |
| 146524 ஏ | 146524 பி |
| 146525 பி | 146526 ஏ |
| 146526 பி | 146527 ஏ |
| 146528 எ | 146530 ஏ |
| 146532 ஏ | 146554 ஏ |
| 146554 பி | 146555 ஏ |
| 146557 ஏ | 146557 பி |
| 146581 ஏ | 146581 பி |
| 146581 சி | 146585 ஏ |
| 146585 பி | 146597 ஏ |
| 146597 பி | 146636 ஏ |
| 146636 பி | 146640 ஏ |
| 146643 ஏ | 146647 ஏ |
| 146647 பி | 146648 ஏ |
| 146648 பி | 146648 சி |
| 130549 ஏ | 130549 பி |
| 131392 ஏ | 131392 பி |
| 131485 ஏ | 131485 பி |
| 131487 ஏ | 131487 பி |
| 131487 சி | 131487 டி |
| 131522 ஏ | 131522 பி |
| 131527 ஏ | 131527 பி |
| 134927 ஏ | 134927 பி |
| 134927 சி | 134927 டி |
| 135451 ஏ | 135451 பி |
| 135461 ஏ | 135461 பி |
| 139188 ஏ | 139188 பி |
| 139188 சி | 139188 டி |
| 139188 ஈ | 141631 ஏ |
| 141635 ஏ | 141635 பி |
| 141649 ஏ | 141650 ஏ |
| 141650 பி | 141651 ஏ |
| 141651 பி | 141657 ஏ |
| 141657 பி | 141660 ஏ |
| 141667 ஏ | 141667 பி |
| 143487 ஏ | 143487 பி |
| 143488 ஏ | 143499 ஏ |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 132118 ஏ | 132118 பி |
| 132118 சி | 139020 ஏ |
| 139020 பி | 139020 சி |
| 139020 டி | 140446 ஏ |
| 140691 ஏ | 140691 பி |
| 142080 ஏ | 142703 ஏ |
| 142826 ஏ | 142852 ஏ |
| 142861 ஏ | 142885 ஏ |
| 142885 பி | 142885 சி |
| 142924 ஏ | 142924 பி |
| 142929 ஏ | 142929 பி |
| 142932 ஏ | 142932 பி |
| 142932 சி | 142941 ஏ |
| 142944 ஏ | 142948 ஏ |
| 142948 பி | 142948 சி |
| 142956 ஏ | 142956 பி |
| 142964 ஏ | 142964 பி |
| 142972 ஏ | 142972 பி |
| 142972 சி | 142973 ஏ |
| 142973 பி | 142992 ஏ |
| 143000 ஏ | 143003 ஏ |
| 143003 பி | 143016 ஏ |
| 143030 ஏ | 143030 பி |
| 143030 சி | 143032 ஏ |
| 143038 ஏ | 143042 ஏ |
| 143044 ஏ | 143044 பி |
| 143049 ஏ | 143059 ஏ |
| 143064 ஏ | 143064 பி |
| 143079 ஏ | 143112 ஏ |
| 143116 ஏ | 143176 ஏ |
| 143177 ஏ | 143179 ஏ |
| 143180 ஏ | 147731 ஏ |
| 147747 ஏ | |

### கோப்பாய்

143026 ஏ

### நல்லூர்

| | |
|---|---|
| 141321 ஏ | 141727 ஏ |
| 141727 பி | 141838 ஏ |
| 141838 பி | 141838 சி |
| 141839 ஏ | 141839 பி |
| 142154 ஏ | 142154 பி |
| 142154 சி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 141364 ஏ | 141889 எ |
| 141889 பி | 141944 ஏ |
| 141944 பி | 142130 ஏ |
| 142130 பி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 141367 ஏ | 141367 பி |
| 141367 சி | 141699 ஏ |
| 141948 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 135917 ஏ | 135917 பி |
| 139743 ஏ | 139743 பி |
| 141357 ஏ | 141357 பி |
| 141860 ஏ | 141860 பி |
| 141860 சி | 141860 டி |
| 141932 ஏ | 141932 பி |
| 141932 சி | 141932 டி |
| 141936 ஏ | 141954 ஏ |
| 141955 ஏ | 142021 ஏ |
| 142097 ஏ | 142132 ஏ |
| 142132 பி | |

## விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கம்பன் சனசமூக நிலையப் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணி முதல் எஸ். சிறீகாந்தா தலைமையில் நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக மாவட்டப் பதிவாளர் என். சதாசிவ ஐயர், திருமதி எஸ். மன்மதராஜன், கே. நித்தியானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-3)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் இவ்வாண்டுக்கான மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தலைமையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா கலந்து கொள்ளவுள்ளார். [க-3]

## இந்துசமய எழுச்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப்பேரவையும், இந்துசமயக் கலாச்சாரத் திணைக்களமும் இணைந்து வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் 29, 30ஆம் திகதிகளில் இருநாள் கருத்தரங்கு ஒன்றை நடாத்துகின்றனர்.

பல அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். தர்மதிபம் சிவலோகநாதன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

## நியமனம்

(புலோலி)

வடமராட்சி கல்வி வலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளராக வலய முறைசாராக்கல்விப் பிரிவு பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. பீ. வேணுகோபால் கல்வித்திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுப் பொறுப் பேற்றுள்ளார்.

மருதங்கேணி கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர். திரு. எஸ். நந்தகுமார் வலய முறைசாராக்கல்விப் பதில் உதவிக்கல்விப் பணிப்பாளராகவும், வலயபாடசாலை நிர்வாகபதில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார். (க-52)

## வடமராட்சி கல்விக் கோட்டத்தில் 5 பாடசாலைகள் மட்டுமே இயங்குகின்றன

(புலோலி)

வடமராட்சி கல்விக்கோட்டத்தில் இயங்கிவந்த 18பாடசாலைகளில் தற்போது 5பாடசாலைகளே இயங்கி வருகின்றன. 13 பாடசாலைகளும்இயங்கவில்லை. இந்த13 பாடசாலைகளின் மாணவர்களும் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ள பகுதியில் உள்ள பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர். அப்பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்களும் மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ள பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள இம் மாணவர்களுக்கான தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கான பாடசாலைகளை நடத்துவதற்கான திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதாகவும். இத்திட்டம் வெகுவிரைவில் நடைமுறைப்படுத்தப்படுமென்றும் வடமராட்சிவலயக் கல்விப்பணிப்பாளர். திரு. எஸ். சிவராஜா தெரிவித்தார். [க-52]

## தற்காலிகத் தண்ணீர்த்தாங்கி அகற்றல்

(ஈச்சமோட்டை)

யாழ். நகர மக்களின் நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வளிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக தண்ணீர்த் தாங்கிகள் அகற்றப்பட்டுள்ளன.

பிரதான நீர்த் தாங்கியில் இருந்து குழாய் நீர்மூலம் யாழ். நகரின் பலபகுதிகளுக்கும் நீர்விநியோகிக்கும் முயற்சி வெற்றியளித்ததையடுத்தே தற்காலிக தண்ணீர்த்தாங்கிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-59)

மாணவ மணிகளே!

உங்கள் பாடசாலை சீருடைகளுக்கு அதிக வெண்மை தருகிறது.

சூரியா நீல சோப்

கேட்டு வாங்குங்கள்.

(395)

## பளை, மருதங்கேணி, சாவகச்சேரி பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து வாழும் குடும்பங்களின் கவனத்திற்கு

பளை, மருதங்கேணி, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் கடந்த மார்சழி மற்றும் சித்திரை மாதங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்களினால் தங்கள் சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம் பெயர்ந்து, அதே பிரிவுகளில் அல்லது ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள முகாம்களிலும், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் தற்காலிகமாக வதியும் குடும்பத்தவர்கட்கு நிவாரணங்கள் உரியவாறு ஒழுங்குபடுத்தி வழங்குவதற்கு ''நிவாரண உதவிப் பதிவு அட்டை'' வழங்கப்படவுள்ளது.

எனவே இடம்பெயர்ந்து வாழும் குடும்பத்தின் குடும்பத் தலைவன்/தலைவி தங்களின் நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன், தவறாது மே மாதம் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தற்போது இடம்பெயர்ந்து வதியும் பிரதேச செயலர் அலுவலகம் சென்று, மேற்படி நிவாரண அட்டையினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இத்தினத்தில் இவ் நிவாரண அட்டைகளைப் பெறத்தவறின் பின்னர் அட்டைகள் வழங்கப்படமாட்டாது என்பதனை வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(கி/287)

யாழ்ப்பாணம்

## அமெரிக்காவில்,

# துப்பாக்கி உற்பத்தி செய்யும் குழுவினர் அதிகாரிகளுக்கு எதிராக மனு தாக்கல்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில், துப்பாக்கி உற்பத்தி செய்யும் குழுவொன்று சமஷ்டி மாநில மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

வீடமைப்பு நகர அபிவிருத்தித் திணைக்களத்திற்கெதிராகவும், நியூயோர்க் சட்டமா அதிபர்களுக்கெதிராகவும், 14 மாநகர மன்றங்களின் அதிகாரிகளுக்கு எதிராகவும் இம் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கைத்துப்பாக்கிகள் வடிவமைப்பது, அவற்றை உற்பத்தி செய்வது விளம்பரப்படுத்துவது, விற்பனை செய்வது சம்பந்தமாக அமெரிக்க காங்கிரஸ் அதிகாரமளிக்காத புதிய தேசிய சட்டவிதிகள் எதையும் நிர்ணயிப்பதில் இருந்து நீதிமன்றம் விலக்களிக்க வேண்டும் எனக் கோரியே மேற்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. [உ]

## திருமண நிகழ்வுக்கு

# பெருமளவிலானோரை ஏற்றிச் சென்ற பஸ் பள்ளத்தில் பாய்ந்ததில் 70 பேர் பலி

[புதுடில்லி]

உத்தரப் பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 70 பேர் வரையில் இறந்திருப்பதாக அங்கிருந்துகிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அல்மோடா மாவட்டத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

திருமண நிகழ்வு ஒன்றுக்கு பேருந்தில் பெருமளவிலானோர் சென்று கொண்டிருந்த வேளை திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து அருகில் இருந்த பாறைக்கற்கள் நிரம்பிய பள்ளத்தில் பாய்ந்தது.

இச்சம்பவத்தில் பேருந்தில் பயணம் செய்தவர்களில் பெரும்பான்மையானோர் இறந்து விட்டனர். ஏனையோர் பலத்த காயங்களுடன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அளவுக்கதிகமான பயணிகளை பேருந்தில் ஏற்றிச் சென்றமையே இவ்விபத்துக்கு காரணமெனக் கூறப்படுகிறது. (உ)

# ஐந்து நாடுகள் கூட்டு மகாநாட்டை மந்திரி மாறன் தொடக்கி வைத்தார்

[புதுடில்லி]

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தாய்லாந்தில் தொடங்கிய ஐந்து நாடுகள் கூட்டமைப்பின் இரண்டாவது மகாநாடு நேற்று புதுடில்லியில் தொடங்கியது.

மத்திய வர்த்தகத் தொழில் அமைச்சர் முரசொலி மாறன் இந்த மகாநாட்டுக்கு தலைமைவகித்துத் தொடக்கி வைத்தார்.

தாய்லாந்து துணை அமைச்சரும் வர்த்தக அமைச்சருமான டாக்டர் சிவாச்கார் இலங்கை வர்த்தக அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரட்ணா பங்களாதேஷ் வர்த்தக அமைச்சர் முகமட் அப்துல்ரலி மியாமீ வர்த்தக அமைச்சர் பார்பாவா ஆகியோர் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# பி. ஜே. பி துணைத்தலைவர் குரானா கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்

## பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சித் துணைத் தலைவர் மதன்லால் குரானா கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக பிரதமர் வாஜ்பாய் அறிவித்துள்ளார்.

வுடன் நெருங்கி உறவாடுவதாகவும் மதன்லால் குரானா குற்றம்சாட்டியிருந்தார்.

இதேசமயம் மதன்லால் குரானாவுடைய குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை எனவும் அமெரிக்காவின் நிர்ப்பந்தம் காரணமாக சென்றமாதம் 1429 பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்கியிருப்பதாகக் கூறுவது முற்றிலும் பிழையானது எனவும் அரசு தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

## உலக தரிசனம்

இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தணிப்பதற்காக அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதனைக் கண்டித்து பிரதமர் வாஜ்பாய்க்குக் கடிதம் எழுதியிருந்ததுடன்- இந்தியப் பிரதமர் அடல் பிஹாரிவாஜ்பாய்அமெரிக்கா

அறிவுக்கு அதிர்ஷ்டம்

மே முதல்
வலம்புரியில்
உலக தரிசனத்தைப்
பாருங்கள், சேருங்கள்!

# ஒஸாமா பின்லேடன் கொசோவோவில் யூகோ பத்திரிகை தகவல்

(றியாட்)

சவூதி அரேபியாவைச் சேர்ந்த தீவிரவாதியான 'ஒஸாமா பின்லேடன் கொசோவோவில் இருப்பதாக யூகோஸ்லாவியாவின் அரசாங்கப் பத்திரிகை ஒன்று கூறுகின்றது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில் சேர்பியாவின் தென்பகுதியில் அல்பேனியர்கள் வசிக்கும் பகுதியில் தாக்குதல்களை நடத்துவதற்குத் தயாராகி வருவதாகவும் இதற்கென இஸ்லாமியத் தீவிரவாதிகள் 500 பேருக்கு அவர் பயிற்சி அளித்துள்ளதாகவும் 'வோடர்' என்ற அப்பத்திரிகை கூறியுள்ளது. (து)

## வர்த்தகத்தில் தாய்லாந்தும் இந்தியாவும்

தாய்லாந்தும் இந்தியாவும் புதிய வட்டார வணிகமண்டலத்தின்கீழ் கட்டுப்பாடற்ற வர்த்தகத்தில் ஈடுபடுவதென்றுமுடிவு செய்துள்ளன.

இந்தமண்டலம் ஆசியான் அமைப்புடன் இணைந்து செயல்படும் என்று வர்த்தக அமைச்சர் முரசொலிமாறன் குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்து இலங்கை ஆகிய நாடுகளின் வர்த்தக அமைச்சர்களுடன் கலந்து உரையாடிய மாறன் இந்த தடையற்ற வாணிப முறை வெளியிட்டார் என்று சொல்லப்படுகின்றது. (து)

## பயணப்பண விடயமாய்

# மூன்று முன்னாள் பிரதமர்களிடம் 12 கோடி அறவிட வழக்குத் தாக்கல்

(புதுடில்லி)

அதிகார பூர்வ பணிகள் அல்லாத மற்ற வேலைகளுக்காகவிமானப் படை விமானங்களைப்பயன் படுத்தியதற்காகக்கட்டணங்கள் கட்டத் தவறிய இந்திய முன்னாள் அமைச்சர்கள் மீதுசட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசுக்குறிப்பு ஒன்று கூறுகிறது.

முன்னாள் அமைச்சர்களான சந்திரசேகர், நரசிம்மராவ், தேவகவுடா ஆகியோரிடமிருந்து 12கோடி ரூபா வசூலிக்கப்பட வேண்டியுள்ளதாகச் சொலிசிட்டர் ஜெனரல் எஸ்.வீ. ஜெய்சிமா டில்லி உயர் நீதிமன்றத்திடம் தெரிவித்தார்.

இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பிரதமமந்திரி அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் சொன்னார்.

ராஜீவ்காந்தி காலத்தில் அதிகார பூர்வமில்லாத பயணங்களுக்காகக் கட்டவேண்டியதொகையான 1கோடியே 80 லட்சம் ரூபாவை காங்கிரஸ்கட்சி கட்டிவிட்டதென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# நிலவும் வரட்சியின் கொடுமையால் ராஜஸ்தான் மக்கள் இடம்பெயர்வு

(புதுடில்லி)

ராஜஸ்தான் மாநிலத்தில் நிலவும் கடும் வரட்சியின் விளைவுகளுக்குத் தாக்குப் பிடிக்கவியலாத, மேற்படி மாநிலமக்களில் ஆயிரக்கணக்கானோர் ஹரியானாவின் மத்திய பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

அங்குள்ள ஆறுகள், குளங்கள் வற்றி புழுதி நிலங்களாக மாறிவருவதுடன், குழாய்க் கிணறுகளும் வற்றிவிட்டதையடுத்து தமது வாழ்வு பற்றி தோன்றியுள்ள பயங்கர நிலைமைகளை தடுக்கும் மார்க்கமாகவே இவர்களது இடப்பெயர்வு அமைகிறது.

குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களில் நிலவும் கடும் வரட்சி காரணமாக சுமார் 5 கோடிப்பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வெளியான கணக்கெடுப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

இதேசமயம்,

வரட்சியின் பாதிப்புகளில் இருந்து மக்களைக் காக்கும் பணியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுவருகிறது.

இந்தவகையில்,

80 இலட்சம் லீட்டர் குடிதண்ணீருடன் இந்தியக் கடற்படைக் கப்பல் ஒன்று விரைந்து குஜராத் மாநிலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆந்திரப்பிரதேசத்தில் புதியதுளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 1400 கிராமங்களுக்கு குடிநீர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிலைமையைச் சமாளிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு அமைப்புக்களின் உதவியையும் நாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## காஷ்மீர் விடயத்தில்

# மூன்றாம் தரப்பு தலையிட முடியாது இந்திய வெளியுறவு அமைச்சர்

(புதுடில்லி)

காஷ்மீர் பிரச்சினையில் எந்தஒரு மூன்றாவது தரப்பும் தலையிட்டு மத்தியஸ்தம் செய்வதை புதுடில்லி எந்த வகையிலும் ஒப்புக்கொள்ளாது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் உறுதிபடக்கூறியிருக்கிறார்.

குடியரசுத் தலைவரின் உரையின் மீதான விவாதத்தின் போது பதிலளிக்கையில் ஜம்முகாஷ்மீர் இந்தியாவின் முக்கியமான பகுதியென்றும் இது அண்டைநாட்டுடனான முக்கியமான பிரச்சினை அல்லவென்றும் தான் ஐ.நாவில் விடுத்த அறிக்கையை மீண்டும் வலியுறுத்தினார்.

இந்திய அரசாங்கமும் அதன் மக்களும் எந்தவகையிலும் பாகிஸ்தானுடன் பகைமை பாராட்டவில்லையென்றும், ஆனால்பரஸ்பரம் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு ஏற்றசுமுகமான சூழ்நிலையை பாகிஸ்தான் தான் உருவாக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் வாஜ்பாய் லாகூருக்கு சென்ற பொழுது உருவாக்கப்பட்ட சூழ்நிலையை, நல்லதொரு நம்பிக்கையை பாகிஸ்தான் இழக்கச் செய்துவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் சபையில் பேசுகையில் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப் வெளியிட்ட கருத்து சிம்லா உடன்படிக்கையிலோ லாகூர் பிரகடனத்திலோ அவருக்கு நம்பிக்கையில்லை யென்பதை எடுத்துக்காட்டுகிறது எனக் குறிப்பிட்டார். (து)

# நளினிக்கு காட்டிய கருணையைவிரிவாக்கி மனிதநேயம் காக்கப்பட வேண்டும்

## வீரமணி கோரிக்கை

(புதுடில்லி)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் சம்பந்தப்பட்ட நளினிக்கு வழங்கிய தண்டனைக் குறைப்பை மற்றைய மூவர் விடயத்திலும் கைக்கொள்ள வேண்டும் என திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலர் வீரமணி கேட்டுள்ளார்.

நளினிக்குக்காட்டியகருணையை மேலும் விரிவாக்கினால் அந்தமனிதநேயம்பாராட்டப்படும்.

ஒரேவிதமாக குற்றம்சாட்டப்பட்டவர்களில் ஒருவருக்கு மட்டும் தண்டனைக்குறைப்பு வழங்குவது மிகவும் கவலை தரும் விடயம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

## வெடிமருந்துக் கிடங்குக் குண்டு

# அதிர்வைத் தொடர்ந்து புகை மூட்டம் மக்கள் ஓடினர், பயிர்கள் கருகின

ராஜஸ்தானில் வரப்பூர் நகரத்தில் வெடி மருந்துகளைச் சேகரித்து வைத்திருந்த கிடங்கு ஒன்று தீப்பிடித்ததில் 3 பேர் இறந்து போனார்கள் 10 பேர் காயமடைந்தனர்.

காது செவிடு படும்படியாக வந்த வெடிச் சத்தத்தைத் தொடர்ந்து தீ கொழுந்து விட்டெரிவதாகவும் 10 கிலோ மீற்றர் சுற்றளவில் உள்ள மக்களை குடி பெயரும்படியும் அரசு உத்தரவிட்டிருக்கிறது.

அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலமாகவே காட்சியளிக்கிறது ஆக்ராவிலிருந்தும் மக்ராவிலிருந்தும் தீயணைக்கும் படையினர் வந்து தீயணைப்பில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அருகிலுள்ள மூன்று இராணுவ நிலைகளிலிருந்து இராணுவத்தினர் தீயணைப்புக்கு உதவி செய்ய அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜெய்ப்பூர் சாலை ரெயில் போக்கு வரத்து நிறுத்தப்பட்டிருகிறது வயல்களெல்லாம் கருகி விட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (து)

நியாயமான ஒரு தீர்வு

# அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டால் விடுதலைப் புலிகள் அதைபரிசீலிப்பர்

## இந்துசமயப் பேரவை செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளை இந்நாட்டின் எதிரிகளாகஅரசாங்கம் கருதாது அவர்களையும் இந்நாட்டின் பிரஜைகளாக அரசு கருதவேண்டும். நியாயமான தீர்வு முன்வைக்கப்படுமானால் நிச்சயமாக அதனை விடுதலைப் புலிகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார்கள் என நாம் முழுமையாக நம்புகின்றோம்.

இந்துசமயப் பேரவை கைதடிச் சைவச் சிறுவர் இல்லத்தில் நடாத்திய ஸ்ரீருத்திர மகாயாக நிறைவின் போது அருட்கவி சீ. வினாசித்தம்பி தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய மேற்படி பேரவைச் செயலாளர் சி. சக்திகிரீவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லை ஆதீனம், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம், நியந்திரி ஸ்ரீ இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம் ஆகிய அமைப்புகள் இணைந்து நடாத்திய ஸ்ரீருத்ர மகாயாகத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

எமது மக்களின் வாழ்வு சிறப்புற அமையவேண்டி நடைபெற்ற இந்த மகாயாகம் தமிழினத்திற்கும் இலங்கை வாழ் சிங்கள மக்களுக்கும் மகிழ்வையே வழங்கும்'. என்று நம்புகின்றோம்.

தமிழ் மக்களின் உரிமைகளை நிபந்தனையின்றி வழங்கக்கூடிய மனோபலத்தை இலங்கை அரசு பெறவேண்டும். இத்தீர்வில் இனவாதிகளின் இடையூறுகள் தகர்த்து எறியப்படவேண்டும். இவை அனைத்தும் சிறப்புற அமைய ஸ்ரீ தில்லை நடராஜப்பெருமான் அபரிமிதமான அருளைச் சொரியவேண்டுமென்று சிவபிரானிடம் வேண்டிநடைபெற்ற யாகம் சிறந்த பலனை எமக்கு வழங்கும். எதுவிததுன்பமும் இன்றி மகிழ்ச்சியோடுஇந்தமண்ணில் நல்லவண்ணம் வாழலாம். அதற்கான காலம் மிகத் தொலைவில்இல்லைஎன்றார்.

நல்லை ஆதீன சுவாமிகள் தமது உரையில்; இந்துக்கள் இந்த நாட்டுப் பிரச்சினையில் ஒரே அணியில் திரண்டு ஒரே கொள்கையோடு இன்று இந்த யாகத்தை நடத்தியுள்ளோம் இதற்கு இறைவனின் நல்லருள் கிடைக்கக்கூடிய வகையில் சிவாச்சாரியார்கள் இந்த யாகத்தை மிகச் சிறப்பாக நடாத்தினார்கள். இத்தகைய புனித பணியை நடாத்திய இந்துசமயப் பேரவைக்கு முழு உலகமும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது என்றார்.

சாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் பேசுகையில்; சமாதானம் வேண்டுமென்று அனைத்து இந்துக்குருமார்களும் அனைத்து இந்து அமைப்புக்களும் ஒரே குரலில் கோருகின்றனர். சில பௌத்த குருமார்கள் யுத்தம் வேண்டுமென்று பேரணி நடாத்துகிறார்கள். இது கவலைக்குரியது. சமாதானம் வேண்டுமென்று உலகிற்குதுணிவாகக் கூறும் இந்துசமயப்பேரவையின் பணி பாராட்டிற்குரியது என்றார்.

இந்துக்குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் பேசுகையில். இந்துக்களின் நலனுக்காக துணிந்து செயற்படும் இந்து சமயப் பேரவை உலகிலுள்ள இந்துக்களின் நன்மதிப்பைப் பெற்ற மாபெரிய ஸ்தாபனமாகும். இந்த அமைப்பு சமாதானம் வேண்டி எம்மை எல்லாம் இணைத்து இந்த யாகத்தை நடாத்தியதையிட்டு நாம் அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

திருக்கணித பஞ்சாங்க அதிபர் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் பேசுகையில்; சகல அமிர்தத்தையும் வழங்கும் பசுவைக் கொலை செய்து உண்ணும் மாபாதகச் செயலை எமது மண் என்று செய்யத் தொடங்கியதோ அன்று எமக்குத் துன்பமும் வரத் தொடங்கிவிட்டது. நாம் பசுவைக் கொலை செய்பவர்களை எதிர்ப்பதோடு தர்மங்களைப் பேணுவதின் மூலம் முழு உலகிலும் மகா பெரிய சமாதானத்தை நிலைநாட்ட முடியும் என்று கூறினார்.

இந்நிகழ்வில் இந்துக்குருமார்கள் சைவ அனுபூதிச் செல்வர்கள் அறிஞர்களும் சமாதான விரும்பிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க)

# பருத்தித்துறைப் பிரதேச செயலகம் இரு சமுர்த்தி வலயங்களாகப் பிரிப்பு

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச செயலகப் பகுதிஇரு சமுர்த்தி வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன வலயம் 1 வலயம் 2 எனப்பிரிக்கப்பட்டுள்ள சமுர்த்தி வலயங்களில் வலயம்1இல் 18 கிராமசேவையாளர் பிரிவுகளும், வலயம் 2இல் 17 கிராமசேவை அலுவலர் பிரிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்விரு சமுர்த்தி வலயங்களுக்கும் இரு சமுர்த்தி வலய அலுவலகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன. அத்துடன் பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவில் உள்ள 35 கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-52)

# இடம் பெயர்ந்தோர் நலன்கருதி இயங்கும் மருதங்கேணி பாடசாலைகள்

(மந்திகை)

மருதங்கேணி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 5 பாடசாலைகள் இடம்பெயர்ந்தவர்களின் வசதி கருதி இயங்கிவருகிறது.

மணற்காடு றோமன்கத்தோலிக்க பாடசாலை, குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன்பாடசாலை, குடத்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலை, குடத்தனை அமெரிக்க மிஷன் பாடசாலை, அம்பன் அமெரிக்க மிஷன் பாடசாலை ஆகியவையே தொடர்ந்தும் இயங்கிவரும் பாடசாலைகளாகும்.

வடமராட்சி கிழக்கின் பகுதிகளில் நிலவும் பதற்ற நிலை காரணமாக இடம்பெயர்ந்து மருதங்கேணி பகுதியில் தங்கியிருக்கும் பாடசாலை மாணவர்கள் நலன் கருதியே இப்பாடசாலைகள் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. (உ-23)

# ★ நாட்டின் தற்போதையநிலைகருதி உதவி மருத்துவர் சங்கப் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைப்பு

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று மேற்கொள்ள திட்டமிட்டிருந்த தொழிற் சங்க நடவடிக்கை தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளதாக அவ் அமைப்பின் தலைவரும் செயலாளரும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய யுத்த நிலையைகருத்திற்கொண்டே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாகவும் மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு உதவுமுகமாக சுமார் 1550 பேரின் மே மாத சம்பளத்தை நன்கொடையாக வழங்கப் போவதாகவும் மேற்படி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (க)

# நாடெங்கிலுமுள்ள 42 பாடசாலைகள் விரைவில் அபிவிருத்தி செய்யப்படும்

(கொழும்பு)

நாட்டின் கல்வித்தரத்தை உயர்நிலைப்படுத்துவதற்காக பிரதேச பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடகிழக்கு மாகாணத்திலுள்ள 42 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்தில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள 12 பாடசாலைகளும், மட்டக்களப்பு - 11, யாழ்ப்பாணம் -7, வவுனியா - 6, அம்பாறை - 4, மன்னார் - 2, என மொத்தமாக 42 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் பௌதிக வளங்கள் வழங்குவதற்கென உலகவங்கி தலா இரண்டரைக்கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் கல்வி உயர்கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். இத்துடன் நாடெங்கிலுமுள்ள 341 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது: (வ)

# வலி. மேற்கில் 151 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மேலும் 151 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதில் வலி வடக்குப் பகுதிகளில் மீளக்குடியமர முடியாத 12 குடும்பங்களுக்கும் பின்வரும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 139 குடும்பங்களுக்கும் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது அவையாவன.

J/157-05, J/158-07, J/159-29, J/160-06, J/161-02, J/164-06, J/166-05, J/167-06, J/168-06, J/174-13, J/175-01, J/176-35, J/177-01, J/179-02, J/180-08, J/181-09, J/165-08.

வலி வடக்கு பி. செ. பிரிவைச் சேர்ந்த இடம் பெயர்ந்த குடும்பங்களில் J/159-03, J/179-01 J/180-08 மேற்படி கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் அந்தந்தப்பகுதி வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 02-ம் திகதி முதல் தமது கொடுப்பனவுகளை வங்கிகளில் பெறலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி-24)

# தென்மராட்சியில்தொடரும் யுத்தத்தால் யாழ்.குடா நாடு பிரிக்கப்பட்டது?

## ஆய்வாளர் கருத்து இது

(யாழ்ப்பாணம்)

தற்போது தென்மராட்சியில் தொடரும் யுத்த நிலையானது யாழ்.குடா நாட்டை இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து தனித்து பிரித்துவிட்டதுபோன்றஓர் நிலையை ஏற்படுத்தியிருப்பது போல தோன்றுவதாகஅரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் வெளியிட்டுள்ளனர்.

யாழ். குடா நாட்டிலிருந்து உலகின்எந்தப் பாகத்திற்கும் தொடர்பு கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி திருமலை பயணிகள் கப்பல் சேவைகளோ அல்லது கொழும்பு பலாலி விமானசேவைகளோ எதுவும் இல்லாத நிலையில் யாழ். மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (க)

# தாதிமாருக்கான பட்டப்பின் படிப்பு கற்கை நெறியை ஆரம்பிக்க முயற்சி

(கொழும்பு)

உலக சுகாதார தாபனத்தின் அனுசரணையுடன்தாதிமாருக்கான பட்டப்பின் படிப்புக் கற்கைநெறி ஒன்றினை ஆரம்பிப்பது பற்றி அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகமும் சுகாதார அமைச்சும் இணைந்து இதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றன இத்துடன் அவுஸ்ரேலியாவின் ''அடலீட்'' பல்கலைக்கழகமும் இணைந்துள்ளது.

இந்தக்கற்கை நெறியினை எதிர்வரும் யூன் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப்பிரதிசுகாதார அமைச்சர்பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். (க-4)

# வடமராட்சி கல்வி வலயத்திற்கு அதிபர்கள் ஆசிரியர்கள் நியமனம்

(புலோலி)

வடமராட்சி கல்வி வலயத்திற்கு நான்கு ஆசிரிய கல்வி ஆலோசகர்களும், இரண்டு அதிபர்களும் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றுள்ளன. வெகுவிரைவில் வடக்குக் கிழக்குமாகாண கல்வியமைச்சு இந்நியமனங்களை வழங்கவுள்ளது.

சமயம் உடற் கல்வி, விஞ்ஞானம் ஆரம்பகல்வி ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர்களும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளுக்கான அதிபர்களுமே நியமிக்கப்படவுள்ளனர். (க-52)

# தாக்குதல் முயற்சி முறியடிப்பு விசேட அதிரடிப் படையினர் அறிவிப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகள் மேற்கொள்ளவிருந்த தாக்குதல் முயற்சியை முறியடித்திருப்பதாக விசேட அதிரடிப் படையினர் அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு கல்முனை வீதியில் களுவாஞ்சிக் பிரதேசத்தில் வீதிப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அதிரடிப் படையினர் தம் மீது இலக்கு வைத்து வைக்கப்பட்டிருந்த குண்டொன்றினை மீட்டுள்ளனர்.

மீட்ட குண்டினைச் செயலிழக்கச் செய்த அதிரடிப் படையினர் தம்மைத் தாக்கவெனத் தயார் நிலையில் நின்ற போராளிகளுடன் ஏற்பட்ட மோதலில் போராளிகள் தரப்பில் 2 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் அவர்கள் கைவிட்டுச் சென்ற கைக்குண்டுகள் ஐந்தினையும், 2 கைத் துப்பாக்கிகளையும், வேறு சில பொருட்களையும் மீட்டிருப்பதாக அறிவித்துள்ளனர். (உ)

# கடை உரிமையாளர் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிறீம் ஹவுஸ் உரிமையாளரான வேலுசிங்கம் ஜெயச்சந்திரன் தனது கடையில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு இவர் கைது செய்யப்பட்டார். இவரது கைது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபர் கைது செய்யப்பட்டதற்கான பற்றுச்சீட்டு அவரது வீட்டாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (க-45)

எண்ணிய எண்ணியாங்கு
எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்
-குறள்

# வலம்புரி

## புதிய புறநானூறு

கடல் கடந்த தேசத்தில் கண்ணீர். ஆனந்தக் கண்ணீர். தமிழினம் எங்கிருந்தாலும் சகோதர உணர்வு அவர்களின் வாழ்வின் உயர்விலே ஒரு உள்ளக்களிப்பு. பேராசிரியர் வீரபாண்டியனின் தமிழ் யதார்த்தம் பெற்று பேசு வதையே குறிப்பிட விழைகிறோம். அன்னவர் நெஞ்சினை நனைத்து நாவினில் நர்த்தன மிட்ட வார்த்தைகள் இவை.

புறநானூற்றை ஈழத்து வீரர்கள் புதுப்பிக்கின்றார்கள். பொதுவாக மக்கள் மத்தியில் புலிகள் இனி வெல்வார்கள். அவர்களை எவராலும் அடக்க முடியாது என்கின்ற எண்ணம் வந்துள்ளது. புதிய புறநானூறு ஒன்றை இந்த மனிதர்கள் இப்பொழுது படைத்திருக்கிறார்கள். அந்த மாவீரர்களின் மாவீரம் கண்டு நான் தலை வணங்குகின்றேன், மெய் சிலிர்க்கிறேன். இப்படி ஒரு வெற்றியை விடுதலைக்காகப்போராடிக் கொண்டிருக்கும் வேறு ஓர் இனமும் பெற்றதில்லை.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு என்ற பெருநாவலன் கூற்றுக் கமைய சுதந்திரக் காற்று எம்மை அண்மிவருகிறது போலும். கடந்த மூன்று தசாப்தங்களாக சுதந்திரம் எமது பிறப்புரிமை என்பது மறுக்கப் பட்டுள்ளது. அதன் உண்மையை உணரப் போகின்றோம் என்பது பெருமகிழ்ச்சியே.

நல்லதோர் புலமையெனில் பிறநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்பது அறிஞர் வார்த்தை. அந்தவகைக்கு மண்ணின் மைந்தர்கள் போற்றப் படும் போது புளகாங்கித மடையாமல் இருக்க முடியாது.

பாரதி என்றொரு யுக புருஷன் மக்களொடு மக்களாய் வாழ்ந்து கவி மழையால் அடிமைத்தளை போக்கினான். மக்களுக்காய் வாழ்பவர்கள் மறக்கப்படுவதில்லை. கண்ணீர் விட்டே வளர்த்தோம்- கருகத்திருவுளமே என்று சுதந்திர தாகம் கொண்ட கவிஞன் எம்மை ஆற்றுப்படுத்தும் திறன்.

வியர்வையும் குருதியும் விடுதலைக்கே என்பவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள். அவர்தம் தியாகம் நாட்டிலே கவிந்திருக்கும் அடிமை இருளைப் போக்கி சுதந்திர ஒளியை ஏற்றட்டும் பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்ததுவே என இறுமாந்திருப்போம்.

- அன்புடன் ஆசிரியர்

# மக்களை கவர்வதில் இவர்கள் வல்லவர்கள்

## எப்பிரச்சினையிலும் வெற்றி காண்பர்

### எண் 5 (புதன்)

எண 5 ஐப் பிறப்பெண்ணாகக் கொண்டவர்கள் புதன் கிரகத்தினால் ஆளப்படுகிறார்கள்: இவ்வெண்ணானது ஆங்கில மாதத்தில் வரும் 5,14,23 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களைக் குறிக்கும்.

### இவ் எண்ணின் பொதுவான குணங்கள்

பொதுவாக 5 எண் ஆதிக்கர்கள் வேகமும், உணர்ச்சியும் கூடியவர்கள். எதையும் சாதிக்கமுடியும் என்ற மனோதிடம் கொண்டவர்கள். துணிவுடன் எந்தப் பிரச்சினையையும் அணுகி ஆராய்ந்து வெற்றிகாணும் வலிமை உடையவர்கள்.

கவர்ச்சி மிக்க இவர்கள் வசீகரமாக ஆடை, அணிகள் அணிந்து அலங்காரமாக வெளியே புறப்படுவதில் ஆர்வமுடையவர்கள். சரளமாகச் சிரித்துப் பேசி தாமும், பிறரும் மகிழ்ச்சி அடையும் வகையில் நடந்து கொள்வார்கள்.

இந்த எண்காரரர் மக்களைக் கவர்வதில் சமர்த்தர்கள். எல்லோரும் நன்கு அறிந்த பிரமுகர்களாக வாழ்வார்கள். ஜன வசியத்தைக் குறிக்கும் இந்த எண்ணினரைச் சுற்றி மக்கள் கூட்டம் எப்போதும் இருக்கும்.

சுஜா
நல்லூர்

இவர்களிடம் வழி தவறாத சிந்தனைகளும், செயல்களும் இருக்கும். வெளிப்பார்வைக்குப் படபடப்பாக இருந்தாலும், உள் உணர்வுகளில் நல்ல நட்பு, நம்பிக்கை உள்ளவர்களாகவே இருப்பார்கள்.

எண் 5 ஐச் சேர்ந்தவர்கள் புத்திக் கூர்மையானவர்கள். ஆகையால் உண்மைகளைக் கண்டு பிடிப்பதில் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பார்கள். காலதாமதமாகும் எந்தக் காரியத்தையும் இவர்கள் விரும்புவது இல்லை.

தங்களுடைய சொந்தக் கருத்துக்களாலும், திட்டங்களாலும் வேகமாக முன்னேறுவார்கள். இவர்கள் அதிகமாகத் தோல்வியைச் சந்திப்பதில்லை.

### இவ் எண்காரரின் தொழில் நிலை

இவர்கள் ஆன்ம ஞானிகளாகவும், தத்துவமேதைகளாகவும், மகான்களாகவும், அறிஞர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும் நீதிபதிகளாகவும், மருத்துவர்களாகவும் தொழில் அதிபர்களாகவும் விளங்குவார்கள்.

கலைசம்பந்தமான எல்லாத் தொழில்களும், வியாபாரமும் இவர்களுக்கு பொருத்தமானது. தேகபலம் கொண்டு செய்யும் தொழிலைவிட புத்திநுட்பத்தால் இயற்றும் தொழில்கள் இவர்களிற்குப் பொருத்தமானது.

### இவ் வெண்காரரின் மண நிலை

இந்த எண்ணினர் பெரும்பாலும் தாம் விரும்பியவர்களையே திருமணம் செய்யத் துணிவர். 5 எண் ஆதிக்கம் உள்ள பெண்கள் அன்பும், பண்பும் கொண்ட மனைவியராக இருப்பர்.

பொருத்தம் இல்லாமற் செய்யும் திருமணங்கள் இந்த எண்ணினருக்கு அமைதியான குடும்ப வாழ்வைத் தராது. இதனால் அபிப்பிராய பேதங்களும், வாக்குவாதங்களும் ஏற்படும்.

### இவ் எண்காரரின் நோய் நிலை

இந்த எண் காரரிற்கு பாரிசவாதம், கை,கால் சோர்வு, சித்தப்பிரமை, வலிப்பு போன்ற நரம்புகள் சம்பந்தமான கோளாறுகள் தோன்றக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

# அன்பு, நீதி, சமாதானம் ஆகிய நற்பண்புகள்

## உண்மை கிறிஸ்தவனின் உயர் இலட்சியங்கள்

இறைமகன் கிறிஸ்து தாம் வாழ்ந்த இலட்சியப் பாதையிலே பற்பல உயர்ந்த மதிப்பீடுகளின் வழி நடந்து நமக்கு நல்வழிகளைக் காட்டி நின்றார். அன்பு. நீதி, சமாதானம், பகிர்தல் போன்றவைகள் ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்வுக்கும் இன்றியமையாதன எனதமது வாழ்வினாலே வாழ்ந்து காட்டியுள்ளார். ஆதித்திருச்சபையிலே இடம்பெற்ற சில நிகழ்வுகளை பின்வரும் சம்பவங்களினூடாக அறிந்துகொள்வோம்.

கே. தவம்
நவாலி

தூய ஆவியின் வருகைக்குப் பின்னர் ஆவியானவரின் வரங்களையும், கொடைகளையும் அளப்பரிய விதமாகப் பெற்றுக் கொண்ட அப்போஸ்தலர்கள், தாம் கண்டறிந்ததையும், கேட்டதையும், அஞ்சா நெஞ்சத்துடன் மக்களுக்கு எடுத்துரைத்து, தமது விசுவாச வாழ்விலே உறுதி பெற்று, ஏனையோரையும் நல் விசுவாச வாழ்வுக்கு இட்டுச் சென்றனர். அப்போஸ்தலர்களின் முன்னுதாரணமான இவ்வாழ்வு ஆதித்திருச்சபையில் வாழ்ந்த மக்களின் வாழ்விலே ஓர் திருப்பத்தை ஏற்படுத்தியது.

கடந்த கால வாழ்விலே அவர்கள் வாழ்ந்த, சுயநலக் கொள்கைகள் யாவும் அடியோடுதகர்த்தெறிப்பட்டன தம்வசம் பதுக்கி வைத்திருந்த அனைத்தையுமே பொதுப். பொருளாகக் கொண்டனர். யான், எனது என்ற குறுகிய வட்டத்திலிருந்து விடுபட்டவர்களாக, யாம், எமது என்ற நோக்கோடு ஓர் குழுமமாகச் செயற்பட்டனர். ''என் பெயரால் எங்கே இருவர், மூவர் ஒன்றித்திருக்கிறீர்களோ அங்கே அவர்கள் நடுவே நான் உள்ளேன்.'' என்ற கிறிஸ்து இயேசுவின் வார்த்தைக் கேற்ப அனைவரும் ஒரே குடும்பமாகச் செபித்து சகோதர மனப்பான்மையுடன் உறவாடி, அப்பத்தைப் பகிர்ந்துண்டும். ஒரே அன்னியோன்னியம் நிறைந்த குழுமமாக இணைந்து கொண்டனர்.

அன்று மரணத்தின் கொடு பிடியிலிருந்து மாவீரனாக உயிர்த்தெழுந்த கிறிஸ்து பிரான், தம் அன்புநிறைந்த அப்போஸ்தலர்களுக்குக் காட்சி அளிக்கையில் ''உங்களுக்குச் சமாதானம் என்று கூறி வாழ்த்தி நின்றார்.



சமாதானம் பெற வாழ்த்தி நின்ற இறைமகன், தொடர்ந்து அப்போஸ்தலர்களுக்கு பாவமன்னிப்பு வழங்கும் அதிகாரத்தையும் வழங்குகின்றார். இதில் நாம் காணும் மறையுண்மையானது. மன்னிப்பு வழங்கும் ஒவ்வொரு உள்ளமும் இறைவனின் நிறைந்த சமாதானத்தைப் பெற்று நிற்கின்றது.

திருமுழுக்கால், உறுதிப் பூசுதலால் ஆண்டவனின் சீடனாக, திருச்சபையின் உறுப்பினனாக மாற்றமடையும் நான், இன்று இவ்வுலகில் நடமாடாத கிறிஸ்துவின் மலரடிகளாக தொண்டு புரியும் கரங்களாக நற்செய்தியுரைக்கும் நாவாக விளங்க வேண்டும். இது எம்மொவ்வொருக்கும் இறைவனால் பணிக்கப்பட்டபணி என்பதை உணர்ந்து கொள்வோம்.

உலக இரட்சகராம் மெசியா இவ்வுலகில் அவதரித்தபோது அவர் கூறி நின்றது ''சமாதானம்'' அவ்வாறே அவர் உயிர்த்தெழுந்த போதும் தம் அப்போஸ்தலர்களுக்குக் கூறி நின்றது சமாதானமே எனவே, சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர் என்ற ஆண்டவன் வாக்கினை அகத்திலே ஏற்று, நாம் நடமாடும் ஒவ்வோர் இடங்களிலும், வெண்புறாவாக, மறு கிறிஸ்துவாக வாழ்ந்து, இன்று அனைத்து உலகும் இழந்து நிற்கும் சமாதானத்தை இறைவனிடமிருந்து நாமும்பெற்று, ஏனையோருக்கும் அழிக்க முன்வருவோமாக.

### பரமபிதா காட்டிய பாதை

# கல்முனை, சம்மாந்துறைப்பகுதியில் 35 பாடசாலைகளுக்கு மின்விநியோகம் துண்டிக்கபட்டதாக அறிவிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை சமாந்துறை கல்வி வலயங்களிலுள்ள 35 பாடசாலைகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 25 இலட்ச ரூபா மின்சாரக் கட்டணங்களை செலுத்தத் தவறியதனல் கொழும்பு தலைமையகத்தின் உத்தரவிற்கிணங்கவே மேற்படி நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக அம்பாறை மாவட்ட மின்சாரசபை பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் கல்முனை வலய கல்வி அலுவலகத்திற்கே மின் துண்டிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் அதிபர்களின் வேண்டுகோளுக்கிணங்க பாடசலைகளின் விடுதிகளுக்கு மட்டும் தற்காலிகமாக மின்சாரம் வழங்கப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதேசமயம்,

உரிய காலத்தில் மின்கட்டணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் வைத்தியசாலைகளுக்கான மின்இணைப்பு துண்டிக்கப் படும் என அம்பாறை மாவட்டமின்சார சபை வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர். (உ)

# அனுமதி கோரல்

(அரியாலை)

யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் க. பொ. த. உயர்தரம் 2002 ஆம் ஆண்டுக்கான கலை வர்த்தக கணித, விஞ்ஞானப் பிரிவுகளுக்கான அனுமதியைக் கோரியுள்ளது. விண்ணப்ப முடிவுத் திகதி மே மாதம் 2 ஆம் திகதி ஆகும் (க-106)

# பயிற்சி பெற்றவர்கள் மாத்திரமே பணிப்பெண்களாக வெளிநாடு செல்வர்

## வெளிநாட்டுப் பணியகம் தெரிவிப்பு

தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்கள் மாத்திரமே இனிமேல் பணிப்பெண்களாக வெளிநாடு செல்ல முடியும் என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

பணியகத்தின் கீழ் நாடு முழுவதும் இருபத்தொரு பயிற்சி நிலையங்கள் இயங்குகின்றன. நாளை முதலாம் திகதி முதல் இலவச தங்குமிட வசதிகளுடன் இலவச பயிற்சிகளும் இந்தப் பயிற்சி நிலையங்களில் வழங்கப்படவுள்ளன. அத்துடன் பணியகத்தின் மூலம் அனுமதி பெற்ற இருபத்தாறு முகவர் பயிற்சி நிலையங்களிலும் இலவசப் பயிற்சி பெற அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

சில தனியார் பயிற்சிநிலையங்களில் பணிப்பெண்களுக்கான பயிற்சி வழங்குவதாக கூறி தங்குமிட வசதி, உணவு என்பவற்றுக்காக அதிக பணம் செலவிடப்படுவதாக பணியகத்துக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளை அடுத்துப் பணியகம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது. (க)

# வடபிராந்திய தொழிற்சங்கங்கள் நடாத்தும் மாபெரும் மேதினக் கூட்டம்

வடபிராந்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பில் இணைந்துள்ள தொழிற்சங்கங்களும் ஏனைய தொழிற்சங்கங்களும் இணைந்து நடாத்தும் மேதினக் கூட்டம் எதிர்வரும் 1ஆம் திகதி முற்பகல் 9.30மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் தோழர் இ. தவராசா தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் 18 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் உரையாற்றவிருக்கின்றனர்.

தொழிலாளர்களதும் தொழிற்சங்கங்களினதும் உரிமைகள் மறுக்கப்படுதலுக்கும் தனியார் மயப்படுத்தலுக்கும் யுத்தத்திற்கும் எதிராகத் தொழிலாளர்களதும் ஏனைய உழைக்கும் மக்களதும் சக்தியைக் கட்டியெழுப்புவதே இம்மேதினக் கூட்டத்தின் முக்கிய தொனிப்பொருளாகும். (வ-106-39)

### புலிகள்...

இதேவேளை வடபகுதியில் தாம் நடத்திய தாக்குதலில் 14 புலிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், திருகோணமலையில் புலிகளுக்குபொருட்களைஎடுத்துச்சென்ற4மாட்டு வண்டில்கள் மீது தாம் நடத்திய தாக்குதலில் அவ் வண்டிகள் தீப்பற்றி எரிந்ததாகவும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் மேலும் அறிவித்துள்ளது.

### 10 இலட்சம்...

அவை ஏற்றுக்கொள்ளப்படாது மறுக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, தாம் கொண்டு சென்ற வைத்திய உபகரணங்களை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றும், எந்த ஒரு அரசியல்வாதியையும் இராணுவ வைத்தியசாலைக்குள் அனுமதியளிக்கக் கூடாதென்றும் உயர் மட்டத்தில் உத்தரவு கிடைத்துள்ளதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவரினால் இன்று காலை தொலை பேசி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக ஐ. தே.கட்சி அறிவித்துள்ளது.

அத்துடன் இந்த வைத்திய உபகரணங்களை ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்குமாறு தமக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக ஐ. தே.கட்சி மேலும் விசனம் தெரிவித்துள்ளது.

## தவறிவிட்டது

சிவசுப்பிரமணியக் குருக்கள் கமல்ராஜ் என்பவரின் 752663963 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் 00902033420 விசேட அடையாள அட்டையும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வலம்புரிஅலு

## செயலாளராக குணராசா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பதிவாளராக கடமையாற்றிய கலாநிதி க.குணராசா வடக்குக்கிழக்கு மாகாண சபையின் பொதுச் சேவைஆணைக்குழு செயலாளராக பதவியுயர்வு பெற்றுச் செல்கிறார். (ச)

### உயிரிழந்த....

ஆறு பேரின் விபரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்

அவர்களின் பெயர் விபரம் வருமாறு-

★ அருச்சுனன் /குமார் (கனகரத்தினம் ரவிக்குமார்) பூநகரி

★ அகலரசி/அகிலரசி (சிவலிங்கம் பிரியதர்ஷினி) முள்ளியவளை

★ சர்மினி (செல்லத்துரை அருங்கீதா) யாழ்ப்பாணம்

★ லெப். உலகநாதன் (கனகசுந்தரம் நித்தியதரன்) மட்டக்களப்பு

★ 2 ஆம் லெப். பொதிகை மகன் (சிவம் சசிதரன்) யாழ்ப்பாணம்

★ காந்தரூபன் (வடிவேல் தேவசசிகுமார் உருத்திரபுரம் (வ-ச)

### இராணுவ...

நியமிக்கப்பட்டிருக்கும் இவர் சிறந்த ஒரு மருத்துவ நிபுணராகவும், படையினருக்கான புனர்வாழ்வுச் சபையின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இதே வேளை இவ் வைத்திய சாலையிலிருந்து மருந்துப் பொருட்களைக் கடத்திய கேணல் எஸ். டி. சி.சில்வா

# வன்னிக்கு மருந்து அனுப்பிவைக்க தொண்டர் அமைப்புகள் கோரிக்கை

(கொழும்பு)

வன்னியில் மருந்துப் பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அங்கு உடனடியாக மருந்துப் பொருட்களை அனுப்புமாறு சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சில் வட பகுதியில் இடம்பெயர்ந்த மக்களின் சுகாதார நிலைமைகள் தொடர்பாக நடைபெற்ற மாநாநாட்டில்கலந்துகொண்டசர்வதேச பொது அமைப்புகள்இவ்வாறுசுகாதாரஅமைச்சிடமும் பாதுகாப்பு அமைச்சிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், எம். எஸ். எவ். அமைப்பு போன்ற அமைப்புக்களே இவ்வாறுகோரிக்கை விடுத்துள்ளன.

இச்சுகாதார சேவை மாநாட்டில்சுகாதாரசேவை பணிப்பாளர், சுகர த அமைச்சு உயர்அதிகாரி பாதுகாப்பு அமைச்சுஅதிகா கள் ஆகியோரும் கல கொண்டமை குறிப்பி தக்கது. (வ

## இன்று பொன்விழா

[அரியாலை]

அரியாலை காந்தி சனசமூக நிலையத்தின் பொன்விழா இசை நிகழ்ச்சிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.5.00 மணிக்கு தலைவர் சு,நவநேசராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

### உசன்,மிருசுவில்.-.

பெருமளவில் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

ஏற்கனவே மாசார்,சோரன்பற்று, வண்ணான்கேணி, பளை, கிளாலியை அண்டிய பகுதிகள் போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து மிருசுவில், உசன் பகுதிகளில் தஞ்சமடைந்திருந்த மக்களும் நேற்று அங்கிருந்து மீண்டும் இடம்பெயர்ந்துள்ளனர்.

உழவு இயந்திரம் மற்றும் மாட்டு வண்டிகளிலும், சைக்கிள்களிலும் எடுக்கக்கூடிய பொருட்களுடன் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர் இவர்களில் சில குடும்பங்கள் யாழ். நகரை அண்டிய பகுதிகளுக்கு வந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

இடம்பெயரும் மக்களில் பெரும்பாலவர்கள் வரணியில் அமைக்கப்பட்ட அகதி முகாமிற்கே அனுப்பப்படுவதாகவும் இவர்களில் சில குடும்பங்கள் தமது உறவினர், நண்பர் வீடுகளிற்கும் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### உசன்பகுதியில். . .

கள் அமைப்பதிலும் பங்கர்கள் வெட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

இதே வேளை உசன் பகுதி

# ஆனையிறவுத்தள வீழ்ச்சியின் எதிரொ மலையகத் தொழிலாளர் மீது தாக்கு

ஆனையிறவை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதன் எதிரொலியாக தென்பகுதி தமிழர் சிங்கள காடையரால் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் கொழும்புக்கு அருகே ஜாஎலப் பகுதியில் ஆடைத்தொழிற்சா யில் கடமையாற்றும்மலை தமிழர்கள் சிங்கள கா யர்களால் தாக்கப்பட்ட மலையக மக்கள் முன்ன யின் தலைவரும் பாரா மன்ற உறுப்பினருமா ரீ.சந்திரசேகரன் முறைப்ப செய்துள்ளார். [வ-

### எழுதுமட்டுவாள்...

டைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நான்கு பிள்ளைகளின் தாயாரான எழுதுமட்டுவாளைச் சேர்ந்த கிருஸ்ணன் தவமணி (வயது40) அதே இடத்தைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை பொன்னைய (வயது 30) ஆகியோரே காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர். (வ-ச)

### பேச...

காமினி அத்துக்கோறளவும் தவிசாளர் கருஜெயசூரியாவும் செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்வோம் என்று ரணில் தனது கடிதத்தில்தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலை குறித்து பேச்சுவார்த்தை நடாத்த வருமாறு ஐ. தே. கட்சிக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தமை தெரிந்ததே. (வ-ச)

### தொலைபேசி. ..,

எடுத்துவரப்பட்ட வானொலி

## பொதுக் கூட்ட

பாறலாய் தொண சபையின் வருடாந்தப் துக் கூட்டம் நாளை பிற் 3மணிக்கு (புது நேரம்)ப ளாய் முருக மூர்த்தி முன்றலில் தொண்டர்ச தலைவர் து.வைத்தியநா தலைமையில் நடைபெ

### மகன்...

என்ற இடத்தில் இடம் றுள்ளது.

டபிள்யூ ஏ: அபய (வயது67) என்பவரே வாறு மகாவலி கங் குதித்து தற்கொலை வராவார்.

### தற்கொலை...

நிலவிவரும் யுத்தச் சூழ் யை அடுத்தும் பாதுகாப் மானவரை பலப்படுத்த டுள்ளதாக செய்திகள் விக்கின்றன.

இத்தகைய பாதுகாப் நிலையில் ஆளும் பொது ஐக்கிய முன்னணி மேதின ஊர்வலத்தை துச் செய்து பொதுக் தை மட்டும் திட்டமிட் கொழும்பு நகரசபை னத்தில் நடத்த முடிவு துள்ளது.

பவரின் 752663963 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் 00902033420 விசேட அடையாள அட்டையும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வலம்புரிஅலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும்.

289

புனர்வாழ்வுச் சபையின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இதே வேளை இவ் வைத்திய சாலையிலிருந்து மருந்துப் பொருட்களைக் கடத்திய கேணல் எஸ். டி. சி.சில்வா கைது செய்யப்பட்டதன் பின்னரே இவர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது (வ

## இன்னிசை நிகழ்ச்சி பிற்போடல்

உரும்பிராய் காந்திஜி ச.ச.நிலையபாலர் பாடசாலையின் நிதிக்காக 30.04.2000இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த சுழிபுரம் கவிதாலயா குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது. என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்

நிலைய நிர்வாகம்
காந்திஜி ச.ச.நிலையம்

288

## உணவு வகை குளிரூட்டல் சேவை

★ கடல் உணவுப் பொருட்கள்,
★ கால் நடை இறைச்சி வகைகள்
குறைந்த கட்டணத்தில் குளிரூட்டி கொடுக்கப்படும்,

யோ. றீகன்
209, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(கி/277)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

### உசன்பகுதியில். . .

கள் அமைப்பதிலும் பங்கர்கள் வெட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

இதே வேளை உசன் பகுதி யுத்தம் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசமாக ஓரே இராணுவ மயமாகக் காட்சி தருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ

### உசன். . .

கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பூநகரிப் பகுதியிலிருந்து தென்மராட்சிப் பகுதி நோக்கியும் தென்மராட்சியிலுள்ள படையினரின் நிலைகளிலிருந்து பூநகரிப்பகுதி நோக்கியும் பல மணி நேரங்கள் மாறிமாறி இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து மக்கள் பதட்டத்துடன் காணப்பட்டனர். கொடிகாமம், மிருசுவில் பகுதியில் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டதுடன் வர்த்தக நிலையங்களும் பூட்டப்பட்டுக்காணப்பட்டது. (வ)

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப. 2-30

கார்த்திக் - ரோஜா
கௌசல்யா நடித்த
சந்தித்தவேளை
CD பிரதி வெளியீடு

மாறு ஐ. தே. ...
ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தமை தெரிந்ததே. (வ-ச)

### தொலைபேசி. ..,

எடுத்துவரப்பட்ட வானொலி உபகரணங்கள் மூலம் இன்று பரீட்சார்த்தமாக இணைப்புகள் ஏற்படுத்தப்படவுள்ளத்ாகவும் அது வெற்றி அழிக்கும் பட்சத்தில் பண்ணையில் உள்ள பரிவர்த்தனை நிலைய இயக்குநர் மூலம் நாளை முதல் தெலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இத்தொலைபேசி இணைப்புகள் முக்கியமாக அரச திணைக்களங்களுக்கும் மற்றும் முக்கிய நிறுவனங்களுக்குமே ஆரம்பத்தில் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் தற்போது 2500 தொலைபேசி நிலையங்கள் இருப்பதாகவும் அவற்றில் ''மோட்டறோலர்' மூலமான தொலைபேசி நிலையங்களுக்கு இந்த இணைப்பு வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஆனையிறவு தொலைத்தொடர்பு கோபுரம்தாக்கப்பட்டதை அடுத்து கடந்த 20ஆம் திகதி நண்பகலுக்குப் பின் தெலைபேசி இணைப்புகள் செயலிழந்தது தெரிந்ததே. (வ)

ஐக்கிய முன்னணி ...
மேதின ஊர்வலத்தை ...
துச் செய்து பொதுக் ...
தை மட்டும் திட்டமிட் ...
கொழும்பு நகரசபை ...
னத்தில் நடத்த முடிவு ...
துள்ளது.

எதிர்க்கட்சியான ஐ ...
கட்சியும் தனது மே ...
கொண்டாட்டத்தில் ந ...
வதற்கெனத் திட்டமி ...
ருந்த இசை நிகழ்ச்சி ...
இரத்துச் செய்து பொ ...
கூட்டத்தை நுவரெ ...
நகரசபை மண்டப ...
நடாத்தவுள்ளது.

கொழும்பு நகரில் ...
நிகழ்ச்சிகளின்போது ...
குண்டு வெடிப்புக்கள் ...
பெறலாம் என்ற அ ...
னால் கொழும்பு பே ...
வரத்திற்கான பாது ...
சிரேஷ்ட பொலிஸ் அத் ...
சகர் விஜயவர்த்தனவி ...
பலப்படுத்தப்பட்டுள்ள ...

கொழும்புநகரில் உள் ...
முக்கிய வீதிகள் நா ...
காலை 10 மணிமுதல் ...
7மணி வரை போக்கு ...
திற்கு தடை செய்ய ...
டுருப்பதுடன், ஊர் ...
நடைபெறும் வீதிகளில் ...
னப் போக்குவரத்துக்கள் ...
காலிகமாக நிறுத்தி ...
படுமென்றும்பொலிசா ...
விக்கும் பாதை ஊடா ...
பயணம் செய்யவேண் ...
என்றும் அறிவிக்கப்ப ...
ளது.

நாகம்ஸ்
சுன்னாகம்
இரு மாதங்களின் முன் இந்தியாவில் வெளியா...
விஜய், சாலினி, ரகுவரன் நடிப்பில்
கண்ணுக்குள் நிலவு
(ரீல்ஸ்)
காட்சிகள் 11-00—2-30 [புதிய நேரம்]
(கி/283)